Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

Deposition of witness for

| | |
|---|---|
| Name | Velu |
| Father's Name | Rajagopal |
| Village | Koothandakuppam |
| Taluk | Natrampalli |
| Caste | MBC |
| Calling | Driver |
| Religion | Hindu |
| Age | 44 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.06.2025

MCOP.57/2021 PW2 Name:வேலு

முதல் விசாரணை

என் முதல் விசாரணை சாட்சியத்தினை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

மனுவில் தொடர்புடைய விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. நான் என்னுடைய ஆட்டோவில் ஓட்டிகொண்டு விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு பின்னால் தான் வந்துகொண்டிருந்தேன். எனக்கு முன்னால் சென்ற ஆட்டோ தான் விபத்தை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. லாரி தீடிரென நின்றதால் அதன்பின் அந்த ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டது. என்னுடைய ஆட்டோவிற்கு சுமார் 50 மீ தொலைவில் அந்த ஆட்டோ சென்றது. அந்த ஆட்டோவிற்கும் லாரிக்கும் இடையில்

சுமார் 10 அல்லது 20 மீ தொலைவுதான் இருக்கும். இரவு 8 மணிக்கு விபத்து நடந்தது. அந்த சமயத்தில் ஜன நடமாட்டம் இல்லை. என்னுடைய ஆட்டோவில் வெளிச்சம் மூலமாக சுமார் 50 மீ தொலைவு வரை பாரக்கமுடியும். விபத்தை நான் நேரில் பார்த்திருக்கமுடியாது என்றால் சரியல்ல. விபத்து நடந்த ஆட்டோவில் ஒரு நபர் தான் பயணம் செய்தார். அந்த ஆட்டோவின் ஓட்டுநர் பெயர் அரி ஆகும். எங்கள் ஆட்டோ ஸ்டேன்டில் அவரை அரி என்று தான் கூப்பிடுவோம். புகாரை யார் கொடுத்தார்கள் என்று தெரியாது. ஆட்டோ ஓட்டுநருக்கு ஒட்டுநர் உரிமம் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. ஆவணங்களை சரிபார்த்து தான் ஆட்டோ ஸ்டேன்டில் சேர்த்து கொள்வார்கள். நின்றுகொண்டிருந்த லாரிமீது அவர் ஆட்டோவை இடித்துள்ளதாக குற்றச்சாட்டு உள்ளது பற்றி எனக்கு தெரரியாது. அதற்கு அபராதம் கட்டியுள்ளார் என்றால் அது தெரியாது. அரவிந்தனை சுமார் 8 ஆண்டுகளாக தெரியும். அவரின் உண்மையான பெயரை கூட நான் கூறவில்லை என்றால் சரியல்ல. பீதாம்பரம் என்பவருக்கு விபத்தில் அடிப்பட்டது. அவர் எங்கள் ஊர்காரர்தான். அவர் அழைத்ததால் தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 04/06/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.06.04 13:44:22 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.